செய்தி வெளியீடு எண். 44-2017 நாள்: 26.01.2017

# விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற 68-வது குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

## குடியரசு தின விழாவில் 152 பயனாளிகளுக்கு ரூ.2 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

## சிறப்பாக பணியாற்றிய 113 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

*****

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள காவல்துறை அணிவகுப்பு மைதானத்தில் 68-வது குடியரசு தின விழா இன்று (26.01.2017) வெகுவிமரிசையாக கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டது. முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் சரியாக தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவல் கண்காணிப்பாளர் திரு.கே.எஸ்.நரேந்திரன்நாயர்,இ.கா.ப., உடன் செல்ல காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அணிவகுப்பினை திறந்த ஜீப்பில் சென்று பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து தீயணைப்புத்துறை, வனத்துறை, ஊர்காவல்படை, சாரண சாரணியர், தேசிய மாணவர் படை, ஜுனியர் ரெட்கிராஸ் ஆகியோர்களின் அணிவகுப்பு மரியாதையினையும் ஏற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து 39 காவலர்களுக்கு முதலமைச்சரின் காவல் பதக்கங்களை வழங்கினார். பின்னர், குடியரசு தின விழா கொண்டாடப்பட்டதற்கான நிகழ்வை குறிக்கும் வகையில் வெண்புறாக்களையும், வண்ண பலூன்களையும் பறக்கவிட்டார். அதனைத் தொடர்ந்து 19 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று, அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, மரியாதை செலுத்தினார். பின்னர் தியாகிகள் அனைவருக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் இனிப்புடன் காலை சிற்றுண்டி வழங்கி உபசரிக்கப்பட்டனர்.

தொடர்ந்து, முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பாக வருடாந்திர பராமரிப்பு நிதியுதவித் தொகையாக 5 பயனாளிகளுக்கு ரூ.1,25,000/- மதிப்பீட்டிலும், வருவாய்த்துறையின் சார்பாக கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினை 16 நபர்களுக்கும், திருமண உதவித்தொகையாக 4 பயனாளிகளுக்கு ரூ.36,000/-மும், கல்வி உதவித்தொகையாக 50 பயனாளிகளுக்கு ரூ.1,28,750/-மும், இயற்கை மரணம்/ ஈமச்சடங்கு உதவித்தொகையாக 6 பயனாளிகளுக்கு ரூ.75000/-மும், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 2 பயனாளிகளுக்கு ரூ.1,50,000/-மும், முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து 8 பயனாளிகளுக்கு ரூ.6,00,000/-மும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பாக 1 பயனாளிக்கு ரூ.4,650/- மதிப்பீட்டில் சலவைப் பெட்டியும், தோட்டக்கலைத்துறையின் மூலம் 03 பயனாளிகளுக்கு தோட்டக்கலை கருவிகள் வாங்க மானியத் தொகையாக ரூ.4,92,525/-மும், சமூகநலத்துறையின் சார்பாக 2 பயனாளிகளுக்கு ரூ.23,200/- தாலிக்கு தங்கமும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.18,000/- மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளி உதவி உபகரணங்களும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.30000/- மதிப்பீட்டில் சலவைப் பெட்டிகளும், 2 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு ரூ.7000/- பரிசுத்தொகையும்,

சமூக நலத்துறையின் சார்பாக மாநில அளவிலான சிறந்த அங்கன்வாடி பணியாளர்களில் 4 நபர்களுக்கு ரூ.20000/- பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும், வேளாண்மைத்துறையின் சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.23,000/- விசை தெளிப்பான் மானியமும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பாக 9 பயனாளிகளுக்கு ரூ.96,75,000/- கோழியின அபிவிருத்தி திட்ட மானியமும், தொழில் வணிகத்துறை சார்பாக பொது விநியோகத்திட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் நியாய விலைக் கடைகளில் ஊட்டி டீ விற்பனை செய்த 3 விற்பனையாளர்களுக்கு ரூ.6000/- ஊக்கத்தொகையும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பாக பசுமை வீடு வழங்கும் திட்டத்தின் கீழ், 4 பயனாளிகளுக்கு ரூ.8,40,000/-ம், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கிராம வறுமை ஒழிப்பு திட்டத்தின்கீழ் 14 பயனாளிகளுக்கு ரூ.35,00,000/-மும், தாட்கோ சார்பாக 7 பயனாளிகளுக்கு ரூ.45,30,381/- வாகன மானியத்தினையும் என மொத்தம் 152 பயனாளிகளுக்கு ரூ.2,02,84,506/- மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, வருவாய்த்துறையைச் சேர்ந்த 36 பணியாளர்களுக்கும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையைச் சேர்ந்த 13 பணியாளர்களுக்கும், முன்னாள் படை வீரர் நலத்துறையைச் சேர்ந்த 1 பணியாளருக்கும், மாவட்ட சமூக நலத்துறையைச் சேர்ந்த 3 பணியாளர்களுக்கும், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் துறையைச் சேர்ந்த 3 பணியாளர்களுக்கும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையைச் சேர்ந்த 2 பணியாளர்களுக்கும், செய்தி மக்கள் தொடர்புத்துறையைச் சேர்ந்த 1 பணியாளருக்கும், அரசு போக்குவரத்து கழகத்தைச் சேர்ந்த 1 பணியாளருக்கும், பொதுப்பணித்துறையைச் (நீர்வளம்) சேர்ந்த 2 பணியாளர்களுக்கும், வட்டார போக்குவரத்து அலுவலகத்தைச் சேர்ந்த 1 பணியாளருக்கும், பொதுப்பணித்துறையைச் (கட்டிடம்) சேர்ந்த 4 பணியாளர்களுக்கும், நிலஅளவைப் பதிவேடுகள் துறையைச் சேர்ந்த 4 பணியாளர்களுக்கும், தோட்டக்கலைத்துறையைச் சேர்ந்த 5 பணியாளர்களுக்கும், மாவட்ட கருவூலத்தைச் சேர்ந்த 6 பணியாளர்களுக்கும், புவியியல் மற்றும் சுரங்கத்துறையைச் சேர்ந்த 1 பணியாளருக்கும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தைச் சேர்ந்த 1 பணியாளருக்கும், மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த 14 பணியாளர்களுக்கும், நகராட்சி அலுவலகத்தைச் சேர்ந்த 1 பணியாளருக்கும், இசைப் பள்ளியைச் சேர்ந்த 2 பணியாளர்களுக்கும், கால்நடை பராமரிப்புத்துறையைச் சேர்ந்த 2 பணியாளர்களுக்கும், வேளாண்மைத்துறையைச் சேர்ந்த 7 பணியாளர்களுக்கும், மாவட்ட தொழில் மையத்தைச் சேர்ந்த 3 பணியாளர்களுக்கும் என மொத்தம் 113 பணியாளர்களுக்கு நற்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து 7 பள்ளிகளிலிருந்து 1000-க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பங்குகொண்ட கலைநிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கலைநிகழ்ச்சிகளின் இறுதியாக மழலைச் செல்வங்களின் நடன நிகழ்ச்சியினை பார்வையாளர்கள் அனைவரும் கண்டுகளித்தனர். கலைநிகழ்ச்சிகளில் பங்குகொண்ட அனைத்து பள்ளிகளுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளை திரளான பொதுமக்களும், மாணவ மாணவியர்களும் கண்டு களித்தனர். அதனைத் தொடர்ந்து, குடியரசு தின விழாவை சிறப்பாக நடத்திட பல்வேறு ஏற்பாடுகளையும், பணிகளையும், செய்து ஒத்துழைப்பு நல்கிய சம்பந்தப்பட்ட அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இவ்விழாவில் விழுப்புரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சு.இராஜேந்திரன், விழுப்புரம் சரக காவல் துறை துணைத்தலைவர் திருமதி.அனிசாஉசேன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.கே.எஸ்.நரேந்திரன்நாயர்,இ.கா.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.சரயு,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அனுசுயாதேவி, விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜீனத்பானு, முதன்மைக் கல்வி அலுவலர் திரு.சா.மார்ஸ், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.அனந்தராம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.ஸ்ரீநாத், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.லலிதா, முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் திருமதி.அருள்மொழி, தாட்கோ மேலாளர் திரு.வை.ரவிச்சந்திரன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) திரு.பத்ரிநாத் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

-----------------------------------------------------------------------------------------------------------------

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.